27.09.2024

O.S.No. 254/2009

வா.சா.1.திரு.ராஜா, த.பெ.பொன்ராஜ்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு** விசாரணை தொடர்ச்சி

1. இ.எம்.ஜி. சௌந்தரராஜன் என்பவரை நான் நேராக பார்த்துள்ளேன். 23.03.2007ம் தேதியிட்ட பி.வா.சா.ஆ.13 ஆவணம் பதிவு செய்வதற்கு முன்பு அவரைப் பார்த்தேனா அல்லது பின்பு பார்த்தேனா என்றால் அந்த ஆவணம் பதிவு செய்யும் முன்பு இ.எம்.ஜி. சௌந்தரராஜனை பார்த்தேன். இ.எம்.ஜி. சௌந்தரராஜன் பி.வா.சா.ஆ.13 ஆவணம் பதிவுக்கு முன்பு இறந்தாரா, பின்பு இறந்தாரா என்றால் எனக்கு ஞாபகமில்லை. பி.வா.சா.ஆ.13 ஆவணம் பதிவு செய்யப்பட்டதற்கு முன்பே இ.எம்.ஜி. சௌந்தரராஜன் இறந்துபோய்விட்டார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. இ.எம்.ஜி. சௌந்தரராஜன் பார்ப்பதற்கு முன்பே பி.வா.சா.ஆ.10 ஆவணமான மாவட்ட நீதிமன்ற உத்தரவை நான் பார்த்துள்ளேனா என்றால் இ.எம்.ஜி. சௌந்தரராஜனை பார்த்தபோது, மேற்படி ஆவணத்தை பார்த்துள்ளேன். இ.எம்.ஜி. சௌந்தரராஜனின் பவர் ஏஜெண்டு தான் முதன்முதலில் என்னை இ.எம்.ஜி. சௌந்தரராஜனிடம் அழைத்து சென்று அறிமுகப்படுத்தினாரா என்றால் அறிமுகப்படுத்தினார். அவ்வாறு அறிமுகப்படுத்தும்போது, இ.எம்.ஜி. சௌந்தரராஜனிடம் பி.வா.சா.ஆ.12 பொது அதிகார பத்திரத்தில் கோபால கிருஷ்ண கோன் டிரஸ்ட் என்ற

கோதாவில் ஏன் பவர் பத்திரம் எழுதிக் கொடுக்கவில்லை என்று நான் அவரிடம் கேட்டேனா என்றால் கேட்டேன். அந்த வாசகம் விடுபட்டுள்ளது என கூறினார்.

2. கோபால கிருஷ்ண கோன் டிரஸ்ட்டிற்காக டிரஸ்டி என்ற அடிப்படையில் மீண்டும் ஒரு பவர் பத்திரம் எழுதிக் கொடுக்க நான் இ.எம்.ஜி. சௌந்தரராஜனை கேட்டுக் கொள்ளவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.10ன்படி, கோபால கிருஷ்ண கோன் டிரஸ்டிற்கு பாத்தியப்பட்ட சிறுதுார் கிராமத்தில் மொத்தம் 39 ஏக்கர் 75 செண்ட் நிலத்தை மேற்படி, டிரஸ்ட் விற்பனை செய்ய அனுமதியளிக்கப்பட்ட விவரம் நான் தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொள்ளவில்லை. பி.வா.சா.ஆ.10 ஆவணத்தில் சர்வே எண்.158/1 மற்றும் சர்வே எண்.158/2 என முறையே 6 மற்றும் 7வது இலக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளதை காண முடிகிறது என்றால் சரிதான். சர்வே எண்.158ல் கட்டுப்பட்ட நில விஸ்தீரணம் முழுமையும் டிரஸ்ட்டிற்கு பாத்தியப்பட்ட காரணத்தினால் தான் அது சர்வே எண்.158/1 மற்றும் சர்வே எண்.158/2 என உட்பிரிவு செய்யப்பட்டது என்றால், சரியல்ல. எதனடிப்படையில் சர்வே எண்.158லிருந்து சர்வே எண்.158/1 மற்றும் சர்வே எண்.158/2 என உட்பிரிவு செய்யப்படவில்லை என கூறுகிறேன் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியவில்லை.

3. பி.வா.சா.ஆ.12 01.03.2007ம் தேதியில், எழுதப்பட்ட பவர் பத்திரம், பி.வா.சா.ஆ.13. 23.03.2007ம் தேதியிட்ட எனக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட கிரைய ஆவணம் மற்றும் பி.வா.சா.ஆ.14 23.03.2007ம் தேதியிட்ட சண்டிவீரண் கிரைய ஆவணம் ஆகிய ஆவணங்கள் பதிவு செய்வதற்கு முன்பே தாவா பிராதில் கண்ட நிலங்கள் சர்வே எண்.16/3C1B, சர்வே எண்.17/13, சர்வே எண்.17/10, சர்வே எண்.16/3C2,சர்வே எண்.17/11, சர்வே எண்.17/12 ஆகிய உட்பிரிவுகளாகவும் மற்றும் சர்வே எண்.17/1A1A ஆகவும், உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் RDO Court-ற்கு சென்றப் பின்பு தான் தெரியும். RDO Court-ற்கு நான் ஏன் சென்றேன் என்றால் சர்வே எண்.158-ற்கு வாதிகளுக்கு தவறுதலாக பட்டா கொடுத்துவிட்டதாக நான் RDO Court-ற்கு சென்றேன். சர்வே எண்.158/1-ல் கட்டுப்பட்ட சொத்து எனக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், வாதிக்கு கொடுத்த பட்டாவை ரத்து செய்துவிட்டு எனக்கு பட்டா கொடுக்க வேண்டும் என நான் கோரியிருந்தேன். வாதிகள் பெயரில் மேலே சொல்லப்பட்டுள்ள தாவா சர்வே எண்களுக்கான பட்டா ஏற்கனவே கொடுக்கப்பட்டுவிட்டது என்று தெரிந்து கொண்டேன் என்றால் RDO Court-ற்கு போகும்போது நான் தெரிந்து கொண்டேன். நான் உரிமை கோருகின்ற சர்வே எண்.17/1A1A-வைப் பொறுத்து எனக்கு பட்டா வழங்க வேண்டும் என மனு செய்துள்ளேனா என்றால் மனு செய்துள்ளேன். பட்டா பெற்றுள்ளேன்.

பி.வா.சா.ஆ.13 கிரைய ஆவணத்தில், சொத்து விவரத்தில் சர்வே எண்.17/1A1A-என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணத்தில் விடுபட்டுப் போய்விட்டது. பி.வா.சா.ஆ.13 சொத்துவிவரத்தில் சர்வே எண்.158/1ப- என குறிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. பி.வா.சா.ஆ.13 பத்திரத்தின் அடிப்படையில் சர்வே எண்.158/1ப-வுக்கான சொத்திற்கு பட்டா வேண்டும் என நான் கேட்டுள்ளேனா என்றால் அவ்வாறு மேற்படி சர்வே எண்ணை குறிப்பிட்டு பட்டா கேட்டு மனு செய்தேன். அந்த மனுவை ஏற்றுக் கொண்டு சர்வே எண்.158/1ப-விற்கு எனக்கு பட்டா கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். அவ்வாறு சர்வே எண்.158/1ப-விற்கு எனக்கு வழங்கியதாக சொல்லப்படும் பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.7 பட்டா தான் எனது பட்டா என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7 பட்டாவில் சர்வே எண்.17/1A1Aவிற்கு வழங்கப்பட்டதாக காணப்படுகிறதா என்றால் சரிதான்.

5. சர்வே எண்.158/1ப-வின் உட்பிரிவு தான் சர்வே எண்.17/1A1A-என கூறினார்கள். சர்வே எண்.158/1ப-வை சர்வே செய்து உட்பிரிவு செய்ய கோரி நான் படிக்கட்டி மனு போட்டேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. கிரைய பத்திரத்தில் கண்ட சர்வே எண் விஸ்தீரணத்தை உட்பிரிவு செய்து பட்டா வழங்க வேண்டுமென்றால் கிரையதாரர்

உட்பிரிவு செய்து மனு தாக்கல் செய்து அதனடிப்படையில் அளந்து உட்பிரிவு செய்ய வேண்டுமென்றால் சரிதான்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைப்பப்படுகிறது)